# நடத்தை நெறிகள் மற்றும் நேர்மை கொள்கை

விஸ்டியான் பணியாளர்களுக்கான ஒரு வழிகாட்டி

Visteon®



# உள்ளடக்கம்


விஸ்டியான் பழக்க வழக்கங்கள் ........ 3

ஒழுக்கம் மற்றும் நேர்மைக் கொள்கை ........ 4

பரவல் மற்றும் உள்ளடக்கம் ........ 4

பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ........ 4

பொருள் பாதுகாப்பு மற்றும் தரம் ........ 4

நிறுவன சொத்து மற்றும் தகவல் ........ 5

புத்தகங்கள், பதிவுகள் மற்றும் ஆவணங்கள் ........ 5

அறிவுசார் சொத்துரிமை, ரகசியம் ........ 6

உள் வர்த்தகம் ........ 6

ஆர்வக் கோளாறுகள் ........ 7

நியாயமான சர்வதேச வர்த்தக மற்றும் அரசு முறைகள் ........ 8

தொகுப்பு ........ 9

நேர்மை ஹாட்லைன் தொலைபேசி எண்கள் ........ 10

# விஸ்டியான் கண்ணோட்டமும் நடத்தையும

இந்தக் கொள்கைகள் விஸ்டியான் எதற்காக உள்ளது என்பதை பிரதிநிதித்துவப்படுத்துகிறது - இது அன்றாட நடத்தைக்கான ஒரு வழிகாட்டி

## நமது விருப்பம்...

தனித்துவமான மதிப்புகளை அளிக்கக்கூடிய புதுமையான, உயர் தரமான பொருட்களை நமது வாடிக்கையாளர்களுக்கு அளித்து சிறந்த நிறுவனமாக திகழ்வது.

## நாம் எப்போதும்...



### நேர்மையுடன் செயல்படுவோம்

எது சரியானதோ அதைச் செய்தல்

### மற்றவர்களை மதித்து நடப்போம்

நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என விரும்புகிறோமோ அவ்வாறே மற்றவர்களை நடத்துதல்

### வாடிக்கையாளர்களுக்கு முதன்மை இடம்

வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய அனைத்து முயற்சிகளையும் எடுத்தல்

### நமது உறுதிப்பாடுகளை வினியோகித்தல்

முடிவுகள், செயல்பாடுகள், விளைவுகள் என அனைத்திற்கும் விரும்பி பொறுப்பேற்பது

### இணைந்து பயணியாற்றி தொடர்பு கொள்ளுதல்

பயன்களை அடைவதற்கு மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுதல்

### நீடித்த மேம்பாட்டிற்காக தீவிரமாக செயல்படுதல்

நாம் செய்யும் அனைத்தையும் சிறப்பாக செய்ய முயற்சித்தல்

# நடத்தை விதிமுறைகள் மற்றும் நேர்மைக் கொள்கை

நடத்தை விதிமுறைகள் மற்றும் நேர்மைக் கொள்கை மீறப்படுவது தெரிந்தாலோ அல்லது மீறல் குறித்த சந்தேகம் எழுந்தாலோ பணியாளர்கள் அதை தெரிவிக்கும் உறுதியான பொறுப்பு உள்ளது.

## வேற்றுமையும் ஒற்றுமையும்

அனைத்து பணியாளர்களும் மரியாதையுடன் நடத்தப்படும் சூழ்நிலையை உருவாக்கி அதைப் பராமரிப்பதுடன் வேறுபாடுகள் அதிகளவு மதிப்பிடப்படுவதில் விஸ்டியான் உறுதியுடன் உள்ளது.

நமது பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் சமுதாயம் ஆகியவற்றுக்கு சம வாய்ப்புகளை அளிக்கக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய சூழலை ஏற்படுத்த விஸ்டியானில் நாம் பணிபுரிகிறோம். துன்புறுத்தல் அல்லது பாரபட்சமாக நடத்தப்படும் போக்கு எந்த வகையிலும் இல்லாத ஒரு நிறுவன கலாச்சாரத்தை உருவாக்குவதன் மூலம் ஒவ்வொரு பணியாளருக்கும் விஸ்டியானின் வெற்றிக்காக முழுமையாக பங்களிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

## பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல்

விஸ்டியானில் ஒவ்வொரு தனிநபரின் உடல் நலன் மற்றும் பாதுகாப்புக்கு முதன்மையான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

பாதுகாப்பான பணியிட செயல்பாடுகள், நிலைகள் மற்றும் முறைகளை உருவாக்கும் நடைமுறைகளில் விஸ்டியான் உறுதிப்பாடு கொண்டுள்ளது. பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமாக செயல்படும் சூழ்நிலையை உருவாக்கி அதனைப் பராமரிக்க நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.

விஸ்டியான், இயற்கை சூழலை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்புள்ள வர்த்தக குடிமகனாகவும் திகழ்கிறது. நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து சுற்றுச்சூழல் தரங்களுக்கு உட்பட்டு செயல்படுவதுடன், நிர்ணயிக்கப்பட்ட வரன்முறைகள் மற்றும் சட்டத் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் அதற்கும் கூடுதலாகவே செயல்பட்டு வருகிறோம். நமது சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்த நாம் தொடர்ந்து செயலாற்றுவதுடன், திட மற்றும் திரவக் கழிவுகளை குறைக்கவும், சுற்றுச்சூழலில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய இதர நடைமுறைகளை தவிர்த்தும் வருகிறோம். சமூக பொறுப்புறவில் நமது உறுதிப்பாடு மற்றும் நமது நிறுவனத்தின் தொடர் வளர்ச்சிக்கான நீடித்த வளர்ச்சிக்கான அறிக்கையில் விவரித்துள்ளோம். இது நிறுவனத்தின் இணையதளமான www.visteon.com தளத்தில் இடம்பெற்றுள்ளது..

இதுதவிர உள்ளூர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக தன்னார்வம் மற்றும் மனிதநேயத்துடன் முயற்சி மேற்கொள்ளும் நமது பணியாளர்களுக்கு நாம் ஊக்கமும் ஆதரவும் அளித்து வருகிறோம்

## பொருள் பாதுகாப்பு மற்றும் தரம்

நமது அனைத்து செயல்களும் விஸ்டியான் பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், நாம் தயாரிக்கும் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தரத்தின்மீதான உறுதிப்பாடு மற்றும் பொறுப்பை நாம் பகிர்ந்து கொள்கிறோம்.

எதிர்பார்க்கப்படும் அனைத்து சட்டங்கள், வரன்முறைகள், தரம் மற்றும் தொழில்துறை நடைமுறைகளை எதிர்கொள்ளும் அல்லது விஞ்சும் வகையிலான பொருட்களை வடிவமைத்து, உருவாக்கி தயாரித்துக் கொடுக்க விஸ்டியான் உறுதிபூண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை ஏற்கும் வகையில், உயர் தரம் கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகளை அளிக்கவும், நமது பொருட்களின் செயல்திறனை மேம்படுத்த நீடித்த உறுதிப்பாட்டுடனும் நாம் செயல்படுகிறோம். இந்த அர்ப்பணிப்பின்மூலம் நாம் பாதுகாப்பில் அதிக மதிப்பெண்களை தொடர்ந்து ஈட்டக்கூடிய பொருட்களை உருவாக்க முடியும்.



## நிறுவன சொத்து மற்றும் தகவல்

விஸ்டியானின் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதையோ அல்லது அபகரிக்கப்படுவதையோ தடுக்கும் பொறுப்பு அனைத்து பணியாளர்களுக்கும் உள்ளது. இந்தச் சொத்துக்கள் வர்த்தக தகவல்கள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை போன்ற மதிப்பிடமுடியாதவையாகவோ அல்லது கருவிகள் அல்லது வினியோகிகப்படும் பொருட்கள் போன்ற மதிப்பிடக்கூடியவையாக இருக்கலாம்.

நிறுவனத்தின் ஆவணங்கள், சொத்துக்கள், தொழில்நுட்ப தகவல்கள், கடிதங்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புகள்ஆகியவை விஸ்டியானின் செயல்திறன் மற்றும் வர்த்தகப் போட்டிக்கு பயன்படக்கூடிய மதிப்புமிக்க சொத்துக்கள் ஆகும். இவை அனைத்தும் நிறுவனத்தின் சொத்துக்கள் ஆகும். மற்ற சொத்துக்களைப் போன்றே இவையும் தவறாக பயன்படுத்தப்படுவதோ அல்லது அபகரிக்கப்படுவதோ தடுக்கப்பட வேண்டும். இவை விஸ்டியானின் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்தச் சொத்துக்களை பாதுகாப்பதில் எதிர்பாராமல் வெளியாவதை தடுப்பது மற்றும் அடையாளம் காணுதல் உள்ளிட்டவையும் அடங்கும். இந்தப் பொறுப்பு மற்றும் தடைகள் மின்னணு தகவல் முறைகளுக்கும் (இ-மெயில், இணையதளம் உள்ளிட்டவை) சம அளவில் பொருந்தும். விஸ்டியானின் பணியாளர்கள் கொள்கைக்கு எதிரான மின்னணு தகவல் தொடர்பு முறைகளை அணுகுவதோ அல்லது உருவாக்குவதோ தடுக்கப்பட வேண்டும்.

## பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் தாக்கல்கள்

பணியாளர்கள் பதிவேடுகளை துல்லியமாக வைத்துக் கொள்ள வேண்டும். வரன்முறை அமைப்புகளில் நிறுவனம் தாக்கல் செய்யும் ஆவணங்களிலும், நமது பொதுத் தகவல் தொடர்புகளிலும் முழுமையான, நியாயமான, துல்லியமான தகவல்களை உரிய நேரத்தில் தெரிவிக்க வேண்டும்.

பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டு சமுதாயத்துடனான விஸ்டியானின் உறவு, நேர்மையான மற்றும்ஒருங்கிணைந்த நிதித் தகவல்கள் மற்றும் அது தொடர்பான தகவல்களை அளிக்கும் நமது முறையான பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. செக்யூரிட்டிஸ் மற்றும் எக்ஸ்சேஞ்ச் கமிஷன் உள்ளிட்ட அரசு அல்லது வரன்முறை அமைப்புகளில் நிறுவனம் தாக்கல் செய்யும் ஆவணங்களில் உள்ள தகவல்கள் மற்றும் இதர நிறுவன தகவல்கள் அனைத்தும் முழுமையானதாகவும், நியாயமானதாகவும், துல்லியமாகவும், உரிய நேரத்திலும், புரியும்படியாகவும்இருப்பதை உறுதி செய்வதற்கு நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். நாம் தயாரிக்கும் அல்லது மறு ஆய்வு செய்யும் நிதி நிலை ஆவணங்கள், செலவு விவரங்கள், பொறியியல் மற்றும் இதர தொழில்நுட்ப ஆவணங்களில் உள்ள தகவல்கள் துல்லியமாக இருப்பதையும் நாம் அனைவரும் உறுதிப்படுத்த வேண்டும்.

அரசின் விசாரணைகள் மற்றும் ஆய்வுகளின் போது ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்பது விஸ்டியானின் கொள்கையாகும். அனைத்து அரசு தாக்கீதுகள், சம்மன்கள், சட்ட நடைமுறைகள் தொடர்பான தகவல் கோரிக்கைகள் அல்லது இதர விசாரணைகள் அல்லது சட்ட அமலாக்க அதிகாரி அல்லது முகமை, நீதிமன்றம் அல்லது வழக்கறிஞர்களின் கோரிக்கைகள் உடனடியாக சட்டத் துறைக்கு தெரிவிக்கப்பட வேண்டும். நேர்க்காணல் கோரிக்கை, ஆவணங்கள் கோரிக்கை அல்லது விசாரணை அல்லது வழக்கு தொடர்பான இதர கோரிக்கைகள் இதில் அடங்கும்.

ஆவணங்களின் உண்மைத்தன்மையை மாற்றும் நோக்கத்துடன் அல்லது எந்தவொரு அரசு விசாரணை அல்லது வழக்கு நடைமுறைக்கான ஆவணங்களை அழிப்பது அல்லது திருத்துவது என்பது குற்றமாகும். நிலுவையில் உள்ள, அச்சுறுத்தலுக்குள்ளான அல்லது வழக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு உள்ள அல்லது தணிக்கைக்கான ஆவணங்களை எந்தவொரு காரணத்திற்காகவும் அழிக்கக்கூடாது. நிறுவனத்தின் ஆவணங்கள் முறையின்றி மாற்றி அமைக்கப்பட்டிருப்பதாகவோ, அழிக்கப்பட்டிருப்பதாகவோ அல்லது விஸ்டியானின் ஆவண பராமரிப்பு கொள்கைக்கு எதிராக செயல்பட்டிருப்பதாகவோ தோன்றினால் அதுபற்றி உடனடியாக சட்டத்துறைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

இந்தக் கொள்கை மீறப்பட்டிருப்பது தவிர, சுதந்திரமான தணிக்கையாளர்கள் அல்லது உள்தணிக்கை குழு உறுப்பினர்களுக்கு தணிக்கை கணக்குகள் அல்லது நிதி தொடர்பான தகவல்கள் தவறாக தரப்படுவது குற்றவியல் தண்டனை உள்ளிட்ட மோசமான சட்ட பாதிப்புகளை ஏற்படுத்தும்.



## அறிவுசார் சொத்துரிமை, நம்பகத்தன்மை மற்றும் ரகசியம்

வாடிக்கையாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் இதர வர்த்தக தொடர்புகளிடமிருந்து ரகசியமான மற்றும் சொத்துரிமை தகவல்கள் விஸ்டியானிடம் நம்பிக்கையும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் அனைத்தும் விஸ்டியானின் தகவல்களைப் போன்றே பாதுகாக்கப்பட வேண்டும்.

கண்டுபிடிப்புகள், யோசனைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமையின் இதர வடிவங்கள் ஆகிய அனைத்தும் விஸ்டியானின் வெற்றிக்கு முக்கியமாகத் திகழ்கின்றன. இதன் காரணமாக நாம் மதிப்புமிக்க நிறுவன தொழில்நுட்பத்தை காப்புரிமைகள், வர்த்தக ரகசிய பாதுகாப்பு, காப்பிரைட்கள், டிரேட்மார்க்குகள் அல்லது இத்தகைய இதர முறைகளின் மூலமாக பாதுகாத்து வருகிறோம். இதர நிறுவனங்கள் அல்லது தனிநபர்களின் அறிவுசார் சொத்து தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்க சமமான உறுதிப்பாட்டை விஸ்டியான் கொண்டுள்ளது.

நிறுவன தகவல்கள் மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றை உலகளாவிய தகவல் தொழில்நுட்ப கொள்கைகள் மூலமாக விஸ்டியான் பாதுகாத்து வருகிறது. இந்தக் கொள்கைகள் நிறுவனத்தின் வர்த்தக தகவல்கள் மற்றும் சொத்துக்களை ஒப்புதலின்றி யாரும் அணுகுவதிலிருந்தோ அல்லது வெளியிடுவதிலிருந்தோ பாதுகாப்பதற்கான வழிகாட்டுதலை அளிக்கிறது. நமது தகவல் தொடர்பு முறைகள் மூலமாக வெளியிடப்படும் தகவல்கள் உரிய முறையில் கட்டுப்படுத்தப்படுவதை இது உறுதி செய்கிறது.

## உள்ளிருப்போர் வர்த்தகம்

ரகசியமான மற்றும் சொத்துரிமை தகவல்களை ஒப்புதலின்றி வெளியிடுவதை தடுப்பதன் மூலம் நாம் நமது நிறுவனத்தின் மதிப்பிமிகு சொத்துக்களை மட்டும் பாதுகாப்பதில்லை - நாம் உள்ளிருப்போர் வர்த்தக விதிகளை பின்பற்றுவதையும் உறுதிப்படுத்த உதவுகிறோம்.

விஸ்டியான் தகவல்கள் தவறாக பயன்படுத்தப்படுவதற்குமு;, சட்ட மீறலுக்கும் உள்ளிருப்போர் வர்த்தகம் ஓர் உதாரணமாகும். உள்ளிருப்போர் வர்த்தகம் என்பது ஒரு தனிநபர் பணியில் இருக்கும் போது தெரிந்து கொள்ளும் வெளிப்படுத்தப்படாத தகவல்களைக் கொண்டு பங்குகள் அல்லது இதர பத்திரங்களை வாங்கும்போதோ விற்கும்போதோ உள்ளிருப்போர் வர்த்தகம் நிகழ்கிறது. இவ்வாறு பெறப்படும் தகவல்களை பயன்படுத்துவதோ அல்லது இந்தத் தகவல்களை பயன்படுத்தி விஸ்டியானின் பங்குகள் அல்லது மற்ற நிறுவனங்களின் பங்குகளை வாங்கும் அல்லது விற்கும் மற்றவர்களுக்கு (குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்) தெரிவிப்பது நடத்தை விதிகளுக்கும் சட்டத்திற்கும் விரோதமானது. இதே போல்பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படாத நிறுவனத்தின் நிலுவையில் உள்ள பரிவர்த்தனைகளான கையகப்படுத்துதல், அல்லது, யுக்திசார்ந்த கூட்டணிகள் குறித்த டிப்ஸ்களை கொடுப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.



## நலன்கள் தொடர்பான சர்ச்சை

தனிப்பட்ட விருப்பங்கள் மற்றும் விஸ்டியான் விருப்பங்களுக்கு இடையே சர்ச்சை ஏற்படுவதை பணியாளர்கள் தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத சர்ச்சைகள் ஏற்படும் நிலை தோன்றினால், அதை தீர்ப்பதற்கான வழிகாட்டுதலைப் பெற்றுக் கொள்வதுடன், சர்ச்சையை ஏற்படுத்தக்கூடிய பரிவர்த்தனைகள் மற்றும் உறவுகள் குறித்து முழுமையாக தெரிவிக்க வேண்டும்.

விஸ்டியான் சார்பாக மேற்கொள்ளப்படும் நமது நடவடிக்கைகளில் பணியாளர்கள் சரியான கணிப்புகளை பின்பற்றுவதுடன் நடத்தை விதிகள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும். நிறுவனத்திற்கு வெளியே நமது நடவடிக்கைகள் விஸ்டியானை மற்றவர்கள் பார்க்கும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நிறுவனத்திற்கோ அல்லது நமக்கோ பாதகத்தை ஏற்படுத்தும் செயல்பாடுகள், முதலீடுகள் அல்லது விருப்பங்கள் தவிர்க்கப்பட வேண்டும். மிக முக்கியமாக நிறுவனத்தை கடுமையாக பாதிக்கும் தோற்றம் கொண்ட செயல்பாடுகள், நமது நோக்கத்தில் குறுக்கிடும் செயல்பாடுகள், விஸ்டியானின் சிறந்த விருப்பங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் செயல்கள் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

நமது நிறுவத்தின் விருப்பத்தில் சர்ச்சையை ஏற்படுத்தக்கூடிய சில உதாரணங்கள் ஃ

- போட்டி நிறுவனம், வாடிக்கையாளர், வினியோகஸ்தர் அல்லது விஸ்டியானுடன் லாப நோக்கத்துடன் வர்த்தகம் செய்யும் நிறுவனத்தில் 2.5 சதவிகிதத்திற்கு மேல் நிதி ஆர்வம் கொண்டிருப்பது.
- உறவினர் முக்கிய பொறுப்பில் உள்ள நிறுவனம் அல்லது ரொக்க லாபம் உள்ள நிறுவனத்தின் பணிகளை அவுட்சோர்சிங் செய்தல்
- போட்டி நிறுவனம், வாடிக்கையாளர், வினியோகஸ்தர் அல்லது நிறுவனத்துடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனத்துடன் ஆலோசனை, நிர்வாகம் அல்லது பணி உறவு வைத்திருப்பது
- விஸ்டியான் உரிமை கொண்டுள்ள சொத்து அல்லது உரிமை கொள்ள விரும்பும் சொத்தின் உரிமையை கையகப்படுத்துவது
- விஸ்டியானுடன் வர்த்தகம் செய்பவர்கள், அல்லது செய்ய விரும்புகிறவர்களிடமிருந்து அதிக மதிப்பு மிக்க அன்பளிப்புகள், பொழுதுபோக்குகள் அல்லது இதர சலுகைகளை ஏற்பது (அதிகபட்சமாக 50 டாலருக்கு மேல் உள்ளவை)
- இத்தகைய நபர்களிடமிருந்து உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்திற்கோ ரொக்கம், பொருள் அல்லது சேவையில் தள்ளுபடி, கடன் அல்லது ஜாமீன் சலுகை பெறுவது
- பயணம், விடுதியில் தங்குதல் அல்லது இது போன்றவற்றுக்கான செலவைப் பெறுதல்
- அன்பளிப்புகள், பொழுதுபோக்கு அல்லது இதர சலுகைகளை கோருதல்
- எந்த விதமான வயது வந்தோர் பொழுதுபோக்கு

அன்பளிப்புகள் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான வாடிக்கையாளர் மற்றும் வினியோகஸ்தர் கொள்கை பற்றி பணியாளர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அந்தக் கொள்கைகளை பின்பற்றி நடக்க வேண்டும். நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் சில பொழுதுபோக்குகள் வலிமையான பணி உறவை ஏற்படுத்துவதற்கான நியாயமான வழிமுறை என்பதை விஸ்டியான் அங்கீகரிக்கிறது. வர்த்தகம் தொடர்பான பொழுதுபோக்குகள் சட்டபூர்வமானதாகவும், நியாயமானதாகவும், எப்போதாவது ஒரு முறை நடைபெறுவதாகவும் நியாயப்படுத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். வர்த்தக உறவுக்கான நியாயமான மதிய உணவு விருந்து அல்லது இரவு உணவு விருந்து, எப்போதாவது ஒரு முறை இருந்தால் அது பொதுவாக ஏற்றுக் கொள்ளத்தக்கது. ஆனால் வினியோகஸ்தர் ஒருவர் குறிப்பிட்ட தேதிகளில் நடத்தும் விருந்துகள் ஏற்கத்தக்கதல்ல. விளையாட்டுப் போட்டி ஒன்றுக்கான சீசன் டிக்கெட்டை பெற்றுக் கொள்வது ஏற்கத்தக்கதல்ல என்ற போதிலும் இதுபோன்ற நிகழ்வுகளுக்கு எப்போதாவது ஒருமுறை அழைப்பு விடுக்கப்படுவது ஏற்கத்தக்கதாகும். மதுபான அன்பளிப்புகள் பெரும்பாலான நாடுகளில் அனுமதிக்கப்படுவதில்லை. ஒரு அன்பளிப்பு அல்லது சாதகம் ஏற்றுக் கொள்ளத்தக்கதுதானா என்பதும், பொழுதுபோக்கு அன்பளிப்பு போன்றவை குறித்த சந்தேகம் எழுந்தால் சட்டத்துறையில் கேட்டுக் கொள்ள வேண்டும்.



## நியாயமான வர்த்தகம் மற்றும் போட்டி

நாம் கடுமையாக போட்டியிட்டு நியாயமான வர்த்தகம் மேற்கொள்ள வேண்டும். ரகசியமான தகவல்களை திரித்தல், திருடுதல், மறைத்தல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல், தவறாக புரிந்துகொள்ளுதல் மற்றும் நியாயமற்ற நடைமுறைகள் மூலம் நியாயமற்ற பயன்களை அடைவது தவிர்க்கப்பட வேண்டும்.

விஸ்டியான் கொள்கை மற்றும் நம்பிக்கை விரோத சட்டங்கள், விலை நிர்ணயம், நியாயமற்ற போட்டி அல்லது நியாயமற்ற தாக்கங்களை ஏற்படுத்தும் எந்தவொரு செயல், அல்லது போட்டியை கட்டுப்படுத்தும் செயல்களுக்கு தடை விதிக்கிறது. சட்டவிரோதமான முறையில் போட்டியாளர்களின் தகவல்களை பெறுதல் அல்லது சாதகங்களைப் பெறுதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நம்பிக்கை விரோத சட்டங்கள் மீறல் மற்றும் விஸ்டியான் கொள்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் சில வருமாறு

- விலைகள், செலவுகள், உற்பத்தி மட்டங்கள், ஏலம் அல்லது ஏல நடைமுறைகள், பிராந்தியங்கள், ஏற்றுமதி அல்லது இறக்குமதியில் உள்ள வரையறைகள், வினியோக வழிமுறைகள் அல்லது வாடிக்கையாளர்கள் பற்றி போட்டி நிறுவனங்களுடன் விவாதித்தல்
- ஒரு பொருளை குறிப்பிட்ட அல்லது அதற்கு மேலான விலையில் விற்பனை செய்ய அல்லது குத்தகைக் விடுவதில் வாடிக்கையாளர்களின் தகுதிக்கு வரையறை நிர்ணயித்தல்

நம்பிக்கை விரோதம் மற்றும் நியாயமான வர்த்தக பிரச்சனைகள் மிகவும் குழப்பானதாகும். எந்தவொரு செயல் அனுமதிக்கப்படலாம் என்பதும் எது முறையற்றது என்பதும் வேறுபடுத்திப் பார்ப்பது மிகவும் நுணுக்கமானதாக இருக்கும் என்பதுடன் அதற்காக சந்;தக் கட்டமைப்பை சார்ந்திருக்க வேண்டும். எந்தவொரு தருணத்தில் சந்தேகம் எழுந்தாலும் தயவு செய்து சட்டத்துறையை தொடர்பு கொள்ளவும்.



## சர்வதேச வர்த்தகம் மற்றும் அரசு கட்டுப்பாடுகள்

விஸ்டியானின் ஏஜெண்ட்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களும், விஸ்டியான் வர்த்தகம் செய்யும் நாடுகளில் உள்ள அனைத்து சட்டங்களுக்கும், அவதூறு மற்றும் துன்புறுத்தலுக்கு எதிரான சட்டங்களுக்கும், குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமைகளுக்கு எதிரான சட்டங்களுக்கும் உட்பட்டு செயல்பட வேண்டும்.

அரசு அல்லது சர்வதேச வர்த்தக சந்தைகளில் ஈடுபட்டுள்ள நபர்கள் எதிர்கொள்ள வேண்டிய மிக முக்கிய சட்டங்களில் ஒன்றாக அன்னிய ஊழல் நடைமுறைகள் சட்டம் (எ∴ப்சிபிஏ) உள்ளது. விஸ்டியான் வர்த்தகம் செய்யும்உலகில் எந்தவொரு நாட்டிலும் உள்ள விஸ்டியானின் அனைத்து பணியாளர்கள் அல்லது இதர பிரதிநிதிகளுக்கு எ∴ப்சிபிஏ சட்டம் பொருந்தும். அரசு முன்னுரிமை பெறுவதற்காக வெளிநாட்டு அதிகாரிகள், அரசியல் கட்சிகள் அல்லது அரசியல் பதிக்கான வேட்பாளர்களுக்கு சலுகைகள் அல்லது பணம் கொடுப்பதை எ∴ப்சிபிஏ தடை செய்கிறது. இந்த தடையானது ரொக்கம் மட்டுமின்றி எந்தவொரு மதிப்புமிக்க சலுகைகளை அரசு அதிகாரிகளுக்கு மட்டுமின்றி அவர்களது பிரதிநிதிகள் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்கு அளிப்பதையும் தடை செய்கிறது. வரையறுக்கப்பட்ட சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அரசு சேவைகளைப் பெற சட்டரீதியாக நியாயமான கட்டணங்களை செலுத்துவது எ∴ப்சிபிஏ சட்டத்திற்கு எதிரானதாக இருக்காது.

.இத்தகைய கட்டணங்கள் சட்டரீதியானதாகவும், மரபாகவும், விஸ்டியான் வர்த்தகம் செய்யும் ஒரு நாட்டில் இருந்தாலும், அத்தகைய செயல்களை சட்டத் துறையின் ஒப்புதலைப் பெறாமல் செய்யக்கூடாது. விஸ்டியான் பணியாளர்கள் அல்லது இதர பிரதிநிதிகள் அன்பளிப்புகள், அரசியல் அல்லது அறக்கட்டளை நன்கொடைகளை அரசு பிரதிநிதிகள் அல்லது வெளிநாட்டு அதிகாரிகளுக்கு அளிக்கும் போதும் சட்டத்துறையின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

விஸ்டியான் செயல்படக் கூடிய சில நாடுகளில் பல்வேறு சட்டங்கள் அதன் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு கட்டுபாடுகள் விதிக்கின்றன. எந்த ஒரு புதிய நாட்டிலும் வர்த்தகத்திற்காக நுழையும் முன்பு சட்டத்துறையுடன் ஆலோசிக்க வேண்டும்.

## தொகுப்பு

நேர்மை என்பது சரியான செயல்களை செய்யும் நபர்களைப் பற்றியது டு தனிப்பட் ஆதாயங்கள் அல்லது சட்டத்திலோ இந்தக் கொள்கையிலோ உள்ளவற்றிலிருந்து சாதகத்தை எடுத்துக் கொண்டு மற்றவர்களை பாராட்டுவது அல்ல. இந்தக் கொள்கைகளை கடைப்பிடிப்பது மட்டுமின்றி, அதைப் பாதுகாப்பது டு நிறுவனத்தின் நடத்தை தரத்திற்கு எதிரான சர்ச்சைகள் தோன்றினாலோ அல்லது பிரச்சனை ஏற்படும் நிலை தோன்றினாலோ அது பற்றி கேள்வி எழுப்புவதுடன், அதை தெரிவிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கொள்கை மீறப்படுவதாக சந்தேகம் தெரிவிப்பவர்கள் விஸ்டியானின் வர்த்தக ஆர்வத்தை நிறைவேற்ற மேலும் ஆதரவு அளிப்பதுடன், விஸ்டியானை ஒரு நேர்மையான நிறுவனமாக்க அந்த நிறுவனம் உறுதிபூண்டுள்ளதை பொதுமக்கள் கருதுவதை உறுதிப்படுத்துகின்றனர்.

சட்டரீதியான மற்றும் நேர்மையான வர்த்தகம், நிதி அறிக்கைகள், கணக்கீட்டு நடைமுறைகள், உள் கட்டுப்பாடுகள் அல்லது தணிக்கைகள் தொடர்பான கவலைகள் உடனடியாக தெரிவிக்கப்படுவதை விஸ்டியான் ஊக்குவிக்கிறது. இத்தகைய தகவல்கள் மற்றும் கவலைகளை தெரிவிப்பவர்களை பாதுகாப்பது விஸ்டியானின் கொள்கையாகும். ரகசியமாகவும், யார் என்று தெரியாதவகையில் தகவல்களையும் கவலைகளையும் தெரிவிக்கும் முறைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் நிர்வாகிகள், அதிகாரிகள் மற்றும் உயர் மட்ட நிர்வாகிகள், விஸ்டியான் இயக்குனர் குழு உறுப்பினர்கள் என அனைத்துப் பணியாளர்களும் இந்தக் கொள்கைக்கு ஏற்றபடி செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடத்தை தர விதிகளுக்கு முரணாக செயல்படுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள். மேலும், தேவை ஏற்பட்டால் நிறுகூனம் உரிய அமைப்புகளுக்கும் இதை தெரிவிக்கும்.

இந்தக் கொள்கைக்கு முரணாக செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக நீங்கள் நம்பினால், அந்தச் சூழ்நிலையை விளக்கி உரிய வழிகாட்டுதலைப் பெற வேண்டியது உங்கள் கடமையாகும்.

இந்த நடத்தை விதிகளை பின்பற்றுவது தொடர்பான கேள்விகள் அல்லது சந்தேகங்கள் இருந்தால் பணியாளர்கள் அதுகுறித்து மேலாளர்கள், மனித வள மேம்பாட்டுத்துறை அல்லது சட்டத் துறையுடன் ஆலோசிக்க வேண்டும்.

விஸ்டியானின் நடத்தை விதிகள்தொடர்பான கேள்விகள் அல்லது சந்தேகங்கள் இருந்தாலோ அல்லது, நிர்வாகம், மனித வளத்துறை அல்லது சட்டத் துறையுடன் ஆலோசனை நடத்தியும் தீர்வு கிடைக்காமல் இருந்தாலோ அல்லது இந்த தொடர்பு வழிமுறைகள் குறித்து கவலை எழுந்தாலோ, விஸ்டியானின் இயக்குனர் குழுவில் உள்ள தணிக்கை குழுவுடன் தொடர்பு கொள்ள உலகளாவிய ஹாட்லைன் தொலைபேசி உள்ளது.

இந்தக் கொள்கை நிறுவனத்தின் வர்த்தகம் நடத்தும் விதிமுறைகள் மற்றும் நடத்தை விதிகள் ஆகியவற்றை நியூயார்க் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் மற்றும் சார்பேன்ஸ் ஆக்லி விதி 2002-க்கு உட்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இது அனைத்து இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் (அதிகாரிகள் உட்பட) நேர்மையாகவும், சட்டரீதியாகவும் செயல்படுவதை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இயக்குனர்கள் மற்றும் செயல் அதிகாரிகளுக்கு இந்தக் கொள்கையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றால் அது இயக்குனர் குழுவால் மட்டுமே முடியும். இத்தகைய விலக்கு அளிக்கப்பட்டால் அதை அது தொடர்பான சட்டங்கள் மற்றும் அல்லது ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் வரன்முறையின் கீழ் பங்குதாரர்களிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.



கொள்கை மீறல்கள் அல்லது மீறல்கள் குறித்த சந்தேகங்கள் அந்தந்த நாட்டில் உள்ள உரிய நடத்தை விதிகளின்கீழ் தெரிவக்கப்படலாம்.

| சர்வதேச கட்டணமில்லா சேவைகள் (ITFS) | | |
|---|---|---|
| **நாடு** | **தொலைபேசி எண்** | **மொழி** |
| அர்ஜென்டினா | 0-800-444-8084 | ஆங்கிலம் |
| அர்ஜென்டினா | 0-800-555-0906 | ஸ்பானிஷ், ஆங்கிலம் |
| ஆஸ்திரேலியா | 1-800-339276 | ஆங்கிலம் |
| பெல்ஜியம் | 0800-77004 | பிரெஞ்சு, டச்சு, ஜெர்மன், ஆங்கிலம் |
| பிரேசில் | 0800-8911667 | போர்ச்சுகீஸ், ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஆங்கிலம் |
| சீனா (வடக்கு) | 10-800-712-1239 | மந்தாரின், கேன்டனீஸ், ஆங்கிலம் |
| சீனா (தெற்கு) | 10-800-120-1239 | மந்தாரின்,கேன்டனீஸ், ஆங்கிலம் |
| செக் குடியரசு | 800-142-550 | ஆங்கிலம் |
| பிரான்ஸ் | 0800-902500 | பிரெஞ்சு, ஆங்கிலம் |
| ஜெர்மனி | 0800-1016582 | ஜெர்மன், ஆங்கிலம் |
| ஹாங்காங் | 800-964214 | கேன்டனீஸ், மந்தாரின், ஆங்கிலம் |
| ஹங்கேரி | 06-800-17199 | ஹங்கேரியன், ஆங்கிலம் |
| இந்தியா | 000-800-100-1071 | ஆங்கிலம் |
| இந்தோனேசியா | 001-803-011-3570 | இந்தோனேசியன், டச்சு, ஆங்கிலம் |
| இந்தோனேசியா | 007-803-011-0160 | இந்தோனேசியன், டச்சு, ஆங்கிலம் |
| ஜப்பான் ஜெ5 | 0066-33-11-2505 | ஆங்கிலம் |
| ஜப்பான் ஜெபி | 00531-121520 | ஜப்பானிஸ், ஆங்கிலம் |
| கொரியா (தெற்கு) | 00798-14-800-6599 | கொரியன், ஆங்கிலம் |
| மெக்சிகோ (எம்1-எம்5) | 001-866-737-6850 | ஆங்கிலம் |
| மெக்சிகோ | 001-8008407907 | ஸ்பானிஷ், ஆங்கிலம் |
| பிலிப்பைன்ஸ் | 1-800-1-114-0165 | ஃபிலிப்பினோ, ஆங்கிலம் |
| போலந்து | 0-0-800-1211571 | போலிஷ், ஆங்கிலம் |
| போர்ச்சுகல் | 8008-12499 | ரஷ்யன், ஆங்கிலம் |
| ரஷ்யா | 8-10-8002-6053011 | ஆங்கிலம் |
| ஸ்லோவேகியா | 0800-001-544 | ஆங்கிலம் |
| தெற்கு ஆப்பரிக்கா | 080-09-92604 | ஸ்பானிஷ், ஆங்கிலம் |
| ஸ்பெயின் | 900-991498 | ஸ்விடிஷ், ஃபின்னிஷ், ஆங்கிலம் |
| ஸ்வீடன் | 020-79-8729 | ஆங்கிலம் |
| தாய்லாந்து | 001-800-12-0665204 | ஸ்பானிஷ், ஆங்கிலம் |
| யுனைடெட் கிங்டம் | 08-000328483 | ஆங்கிலம் |
| வெனி சூலா | 0800-1-00-4586 | ஸ்பானிஷ், ஆங்கிலம் |

| ஏடி அண்ட் டி நேரடி தொடர்பு | | | |
|---|---|---|---|
| **நாடு** | **தொலைபேசி எண்** | **டோனுக்கு பின்** | **மொழி** |
| மொராக்கோ | 002-11-0011 | 855-266-7041 | ஆங்கிலம் |
| துருக்கி | 0811-288-0001 | 855-266-7041 | ஆங்கிலம் |
| | | | |
| **நாடு** | **தொலைபேசி எண்** | **மொழி** | |
| கனடா | 855-266-7041 | ஆங்கிலம் | |
| பியூர்டோ ரிகோ | 855-266-7041 | ஆங்கிலம் | |
| அமெரிக்கா | 855-266-7041 | ஆங்கிலம் | |

* வடக்கு சீனாவை உள்ளடக்கியவை - பெய்ஜிங், தியான்ஜின், ஹீலியர்ங்ஜியாங், லியோனிங், ஷான்டாங், ஷான்(1)சி, ஹிபி, ஹேனான் மற்றும் இன்னர் மங்கோலியா

** தெற்கு சீனாவை உள்ளடக்கியவை - ஷங்காய், ஜியாங்சு, ஜெஜியாங், அன்ஹுய், ஃபுஜியான், ஜியாங்சி, ஹியுபி, ஹுனான், குவாங்டாங், குவாங்சி, ஹைனன், சிங்கிங், சிச்சுவான், யுன்னான், திபெத்தன்னாட்சி பகுதி, ஷான்(3)சி, கன்சு, கிங்காய், நிங்சியா, சிங்ஜியாங் மற்றும் தன்னாட்சி பகுதி

**இணையவழியில் தெரிவிக்க, விஜயம் செய்யவும் : www.visteon.ethicspoint.com**

**Visteon Corporation**
One Village Center Drive
Van Buren Township, Mich. 48111 USA
November 2012